1974 மார்ச் 30]

திரு. க. உரொ. எட்மண்ட் : இப்படிப்பட்ட மாநாடுகள் நடைபெறும் போது பள்ளிக்கூடங்களை அபிவிருத்தி செய்வதற்காக பொதுமக்களால் அல்லது மாநாட்டில் பங்கேற்கிற முக்கியஸ்தர்களால் ஏதாவது ஆலோசனைகள் சொல்லப்படுகிறதா ? அந்த ஆலோசனைகளை அரசாங்கம் செயல்படுத்துகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநாடு என்றால் அது ஒரு கருத்தரங்கு என்ற வகையில் அமைவதில்லை. இது சாதாரண விழாவாக நடக்கிறது. பொருள்களைக் கொண்டு காட்சியாக வைக்கிறார்கள். மாநாடுகளில் கலந்துகொள்ள பொதுமக்களுக்கு ஊக்கம் தந்து நன்கொடை தருபவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நடைபெறுகிறது. கருத்தரங்கு என்றால் அதில் கருத்துக்கள் பரிமாறப்பட்டு யோசனைகள் எல்லாம் பரிசீலிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டால் அதை கல்வித் துறை ஆராய்ந்து அதற்கேற்ற நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது என்று செய்யலாம். ஆனால் அந்தக் கூட்டங்களில் அப்படி யோசனைகள் சொல்லி தீர்மானங்கள் நிறைவேற்ற வாய்ப்பிருக்கிறது. ஆனால் கட்டாயப்படுத்தப்படவில்லை.

பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவ ஆய்வு.

*687 வினா : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பள்ளிக் குழந்தைகட்கு மருத்துவப் பரிசோதனைத் திட்டம் தமிழ் நாட்டில் எந்தெந்த நகரங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

(இ) இதற்காக நடப்பு ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவ ஆய்வு செய்யும் திட்டம் தமிழ்நாட்டில் திருச்சி, கோயம்புத்தூர், ஆகிய இரண்டு நகரங்களிலும் மற்றும் சென்னை மாநகரிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) இதற்காக நடப்பு ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 3,21,738.00.

திரு. நா. வீராசாமி . சென்னை, திருச்சி போன்ற இடங்களில் இப்படிப்பட்ட வசதி செய்யப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக மாணவப் பருவத்திலேயே சில நோய்கள் வருவதாகவும், அப்படி வருகிற நோய்கள், லெப்ரஸி போன்ற நோய்கள் இந்த நாட்டில் மாணவர்களிடையே சராசரி ஐந்தில் இருந்து பத்து சதவிகிதம் வரை இருப்பதாகவும் ஸ்கின் ஸ்பெஷலிஸ்ட்ஸ் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பயங்கரமான நோய் மாணவப் பருவத்தில்

வருவதன் மூலம் இந்த சமுதாயத்தில் லெப்ரஸி நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் ஏராளமாகி விடுகிறார்கள். எனவே தமிழ்நாடு முழுவதும் இப்படிப்பட்ட ஆய்வு செய்வதற்கு, அவர்களுக்கு வேண்டிய மருத்துவ வசதியைச் செய்வதற்கு வேறு எந்த நிதியிலிருந்தாவது நிதி பெற்று இந்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதற்கு சுருக்கமான விடை, திருச்சியிலும், கோவையிலும் 10,000 குழந்தைகளுக்குத் தான் ஒரு ஆண்டுக்கு ஆய்வு செய்வதற்கு இந்த ஏற்பாடு இருக்கிறது. சென்னை நகரத்தில் வேண்டுமானால் அது 25 அல்லது 30 அல்லது 40,000 குழந்தைகளுக்கு அந்த ஆய்வினை நடத்த முடியும். சென்னை நகரில் உள்ள எல்லாப் பள்ளி மாணவர்களுக்கும் ஒரு ஆண்டுக்கு ஆய்வு செய்வதாக இருந்தால் இப்போது ஆகிற செலவை விட நான்கு மடங்கு பணியாற்ற வேண்டும். ஆகவே இப்போது ஒதுக்கியிருக்கிற மூன்று லட்சம் ரூபாய் என்பது ஒரு வகையில் அந்த முறையைச் செயல்படுத்துவதில் இந்த அரசாங்கத்திற்கு அக்கறை இருக்கிறது என்பதைக் காட்டுவதற்காக நடைபெறுகிறதே தவிர மூன்று கோடி முதல் ஐந்து கோடி ரூபாய் வரை இருந்தால் தான் தமிழ்நாடு முழுவதும் எல்லாக் குழந்தைகளுக்கும், எல்லாப் பள்ளிக் குழந்தைகளுக்கும் ஆய்வு செய்கிற ஒரு பணியையாவது ஒரு ஆண்டில் நிறைவேற்ற முடியும். அப்படிப்பட்ட பெரிய திட்டங்களுக்கு பொது மக்கள் எந்த வகையில்—பிள்ளைகளைப் பெற்றவர்கள் பெற்றுவிட்டு வளர்க்க முடியாமல் அல்லது வளர்க்கத் தெரியாமல் திண்டாடுகிற பெற்றோர்கள் ஏதாவது ஒரு வகையில் அதற்காக ஒரு கட்டணம் செலுத்துவது என்ற முறையில், எதிர்க்கட்சித் தலைவர்களின் ஒத்துழைப்போடு, எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஒரு மாணவருக்கு ஒரு ஆண்டுக்கு ஒரு ரூபாய் தருவது என்றால் மிச்சம் எவ்வளவு செலவானாலும் இந்த அரசு அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும். இப்படிச் சொல்கிற நேரத்தில் இந்த அரசு பெற்றோர்களிடம் வரி வாங்குகிறது என்று எதிர்க்கட்சியினர் சொல்லி விடுவதால் அதை ஊக்கத்தோடு செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்தப் பள்ளிக்கூட மாணவர்களுக்கு மெடிகல் இன்ஸ்பெக்ஷன் செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே மருத்துவ மனைகளில் பணியாற்றக்கூடிய டாக்டர்களுக்கு நிறைய வேலைகள் மருத்துவ மனைகளில் இருக்கிற காரணத்தால் அவர்கள் பள்ளிகளுக்குச் சென்று தக்க முறையில் மாணவர்களைக் கவனிக்கக்கூடிய நிலை இல்லாதிருப்பதால் வேலை வாய்ப்பு இல்லாதிருக்கும் டாக்டர்களை பார்ட் டைம் ஆக **Honorarium** ஊதியம் கொடுத்து இதற்காகப் போடுவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சென்னை நகரில் இதற்காக ஆறு குழுக்கள் அமைக்கப்பட்டு தனியாக டாக்டர்கள் அந்த வேலைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். குழந்தைகள் நல பரிசோதனைக்காக அவர்கள் பரிசோதனை செய்ததற்குப் பின்னால் அந்தக் குழந்தைகளுக்கு நீண்ட

1974 மார்ச் 30]

சிகிச்சை வழங்கப்படவேண்டும் அல்லது இன்னொரு துறை கவனிக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு, ஸ்டான்லி மருத்துவ மனை, கஸ்தூர்பா காந்தி மருத்துவ மனை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, குழந்தைகள் நல மருத்துவ மனை, எழும்பூர், இராயப்பேட்டை, மருத்துவ மனை இவைகளோடு இணைக்கப்பட்டிருக்கிற முறையில் அதிகமாகக் கவனிக்கவேண்டிய குழந்தைகளை அந்த மருத்துவ மனைகளுக்கு அனுப்பி ரெபரல் முறையில் சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்கிறோம். இதற்காக த்தனிக் குழு இருப்பதால் செலவாகிறது. இந்தப் பரிசோதனை நடத்துகிற வேலையில் மாநகராட்சியில் பணியாற்றுகிற டாக்டர்கள் மாலை நேரத்தில் தனி படி பெற்று அவர்களும் இன்று ஒத்துழைக்கிறார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இப்போது ஏராளமான பள்ளிப் பிள்ளைகளுக்குப் பல நோயும் கண் நோயும் வருகின்றன. ஆகவே, இந்த மாதிரி பரிசோதனை செய்கிறபோது டென்டிஸ்டுகளையும் கண் வைத்திய நிபுணர்களையும் அனுப்பி வைத்து அந்தக் குழந்தைகளைப் பரிசோதிக்கிறார்களா ? இல்லை என்றால் அதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, டாக்டர்கள் பரிசோதனை செய்கிறபோது, அது பல் சம்பந்தமாக இருந்தாலும், கண் சிகிச்சை சம்பந்தமாக இருந்தாலும் அவர்கள் அதைப் பரிசோதித்து சாதாரண நோயாக இருந்து மருந்து தேவைப்பட்டால் அதைக் கொடுத்து விடுகிறார்கள். அவர்களுக்குச் சிறப்புச் சிகிச்சை தேவை என்று அறிந்தால், ஆங்காங்கே உள்ள சிறப்புச் சிகிச்சை வசதியுள்ள பெரிய மருத்துவ மனை களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறார்கள்.

அப்படிப்பட்ட சிகிச்சை தரப்படும் போது என்னென்ன வசதிகள் இந்த நாட்டில் இருக்கின்றனவோ அப்படிப்பட்ட வசதிகளை எப்படியெப்படிப் பயன் படுத்தவேண்டுமோ அந்த முறையில் கொடுக்கப்பட்டு வருகிறது.

Artificial Limb Centres

*688 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Government propose to open Artificial Limb Centres in all the hospitals in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆம், மருத்துவக் கல்லூரிகளில் மட்டும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவது என்ற முறையில் நடைமுறைப் படுத்துகிறார்கள். மாநிலத்தில் உள்ள கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளில் படிப்படியாகவே துணை நிலையங்களைத் தொடங்க இயலும்.